மகாபாரதமும் முஸ்லிம்களும்



செ.திவான்

மகாபாரதமும் முஸ்லிம்களும்



செ.திவான்

நியூஸ்மேன் பிரிண்டர்ஸ்
மதுரை.

நூலாசிரியரின் 130வது நூல்

நூலின் தலைப்பு	:	**மகாபாரதமும் முஸ்லிம்களும்**
நூலின் ஆசிரியர்	:	**செ.திவான்**
மொழி	:	**தமிழ்**
பதிப்பு ஆண்டு	:	**ஆகஸ்ட்-2021**
உரிமை	:	**ஆசிரியருக்கே**
பக்கங்கள்	:	**16**
வெளியீடு	:	**சுஹைனா பதிப்பகம்** 106F, 4A, திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627002. போன்: 0462–2572665
அச்சிட்டோர்	:	**நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை.** போன்: 0452 4396667, செல்: 90803 30200
விலை	:	**ரூ.20/–**

மகாபாரதமும் முஸ்லிம்களும்

'சிசுபாலன்' கதையை 'முதல் தாம்பூலம்' என்று பெயரிட்டு 'கல்கி' யில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி எழுதினார். கல்கியும் டி.கே.சியும் மிகவும் பாராட்டினார்கள். ராஜாஜியின் 'வியாசர் விருந்து' 107 அத்தியாயங்களாக வெளிவந்தது.

பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொடித்த நாளில் வரை இவரை இபவர்
பானிறக் கணேசர் குவா குவாகனர் இளையோனே

என்பார் அருணகிரிநாதர்.

அநேக அறநெறிகள் உரையுங்கற்பகத்தரு மகாபாரதம்; அறங்களை உணர்த்துவது இதிகாசம். சிவரகசியம், இராமாயணம், மகாபாரதம் இதிகாசங்கள் ஆகும். 'ஜெயம்', 'அறம்', ஐந்தாம் வேதம்' எனப் போற்றப்படுவது மகாபாரதம்.

மகாபாரதம் பலகதைகளையும், கிளைக் கதைகளையும் உள்ளடக்கியது என்றாலும், அதன் நோக்கம் பாண்டவர்களின் கதையைச் சொல்வதோ, மகாபாரத யுத்தத்தை விவரிப்பதோ, கிருஷ்ண அவதாரத்தை முன்னிறுத்துவதோ அல்ல. அவை அனைத்தும் வியாச முனிவர் மனித குலத்திற்குத் தெரிவிக்க விரும்பிய மூன்று நீதி நூல்களை சாமானியர்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்கு அவர்களை ஈர்ப்பதற்கும் கையாண்ட உபாயங்கள் மட்டுமே.

பகவத் கீதை (சாமானிய மனிதனுக்காகவும்) விதுர நீதி (நீதிமான்களுக்காகவும்) தர்மோபதேசம் (ஆட்சியாளர்களுக்காகவும்) கூறப்படும் உபதேசங்கள் தொகுக்கப்பட்டது அல்லது புனையப்பட்டது மகாபாரதம் என்கிற மகாகாவியம்.

பாலகுமாரன்

மகாபாரத்தில் விதம் விதமான குணமுடைய மனிதர்கள் ஒன்றோடொன்று மோதுகிறார்கள். அதாவது பேசுகிறார்கள், விவாதிக்கிறார்கள் இரண்டு பேர் விவாதத்தை மூன்றாவது ஆள் முறியடிக்கிறார், ஆதரிக்கிறார். இப்படி தொடர்ந்து பேச்சுக்கள் தான் இந்த இதிகாசத்தின் அடிநாதம் என்பார் பாலகுமாரன்.

கே.ராஜகோபாலாச்சாரியார்

தூது சென்றவன் ஏற்றங் கூறும் நூலான பாரதத்தை வேத வியாசர் தந்தார். கீதை பிறக்க நிலைக்களனாய நூலான பாரதத்தை அகத்திய பட்டர் பாரதமாகந்தந்தார் இவ்விரண்டையும் மூலமாகக் கொண்டு வில்லிபுத்தூர் ஆழ்வார் தமிழில்பாடி வில்லிபாரதமாகத் தந்தார். யாழ்ப்பாணச் செல்வர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அச்சேற்றினார். வித்வான் வி.பூதூர் வேங்கடசாமி ரெட்டியார் ‘வில்லிபாரதத்தில் வினோதத்திருத்தங்கள்’ என்ற நூலைத் தந்தார். கலாநிலையம் கே.ராஜ கோபாலாச்சாரியர் வில்லிபாரத்திற்கு செம்பதிப்பு உரையுடன் தந்தார்.

வில்லிப்புத்தூர் ஆழ்வார்

தமிழில் சந்தம் செறிந்த விருத்தப்பாக்களினால் பதினெட்டு பருவங்களும் வில்லிப்புத்தூர் ஆழ்வாரால்பாடப்பட்டது. பிந்தைய எட்டுப் பருவங்கள் கிடைக்கவில்லை பத்துப்பருவங்கள் செய்யுள்களோடு

வெளிவந்து வில்லிப்புத்தூராரின் புதல்வர் வரந்தருவார் சிறப்புப்பாயிரத்தில் பாடிய பாடல் **'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்து பேதை'** என்ற பிரசித்தி பெற்ற பாடாலாகும்.

ம.வீ.இராமானுஜாச்சாரியர்

பல்லாண்டுகளாக உழைத்து ஸ்ரீமகாபாரதம் கும்பகோணம் பதிப்பு வெளியிட்டார். ம.வீ.இராமானுஜாச்சாரியார் கோரக்பூர், தபோவனப் பதிப்புகளும் அ.மாணிக்கம், மிழலைத் தொண்டர், அ.லெ.நடராசன் வ.ஜோதி நூல்களும் வந்துள்ளன. பாண்டவர் பூமி மூன்று பாகங்களாக கவிஞர் வாலி தந்துள்ளார்.

வீ.சீனிவாச்சாரியார்

சங்க இலக்கியத்தில் கடவுள் வாழ்த்துப்பாடிய பெருந்தேவனாரால் இயற்றப்பட்டு கிடைக்கப் பெறாத பாரதம், மு.கோவிந்தப்பிள்ளை பதிப்பித்த

அரங்கநாதக்கவிராயர் பாரதம்		1902
தி.ஈ.சீனிவாசச்சாரியரின்	சமாபருவம்	1910
நல்லப்பிள்ளை பாரதம்		1911
அ.வேங்கடேசச்சாரியரின்	விராடபருவம்	1912
கணபதி சாத்திரிகள்	சாந்திபருவம்	1912
தி.ஈ.சீனிவாசாச்சாரியார்	அநுசாசனிக பருவம்	1913
திரு.வி.கல்யாணசுந்தரனார்	வில்லிபாரதம்	1917
வி.சீனிவாசச்சாரியார்	வீடும பருவம்	1919
வி.சீனிவாசச்சாரியார்	துரோண பருவம்	1919
வி.சீனிவாசச்சாரியார்	கன்னபருவம்	1919

முத்துரத்னமுதலியார் பதிப்பு பாரத வெண்பா		1934
பாரதசார வெண்பா		1947
முத்துரத்னமுதலியார்	மகாவிந்தம்	1950
தி.சந்திரசேகரன்	ஆதிபருவந்தாதி பருவம்	1951
வி.சீனிவாசச்சாரியார் சல்யை சௌப்திக ஸ்தீரி பருவங்கள்		1957
மர்ரே	வில்லிபாரதம்	1957
வை.மு.கோ.வில்லிபாரதம்		1970

தமிழ்க் கடல்ராய.சொ

கிருபானந்தவரியாரின் மகாபாரதம், கம்பநாடர் மோ.வே.கோவிந்தராஜ ஐயங்காரின் வில்லிபாரத வசனம், பிரபஞ்சனின் மகாபாரதம் கவிமொழியாக 199 பாடல்கள், பிறர் மொழியாக 71 பாடல்கள் ஆக 270 பாடல்களில் சைவ சிவனைப் பாடிய சமயப் பொறையாளர் வில்லியும் சிவனும் தந்த தமிழ்க்கடல் ராய.சொ.

கச்சாலையர்

கச்சாலையர் 2800, செய்யுட்களில் பாடிய பாடல்களை மகாபாரதச் சுருக்கம் என்று பத்துத் தொகுதிகளாக மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம் வெளியிட்டுள்ளது.

மகாகவிபாரதி

மகாகவி பாரதியின் ‘பாஞ்சாலி சபதமும் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மாரி வாயிலும் புகழேந்திப் புலவரின் நளவெண்பாவும் அதிவீரராமபாண்டியரின் நைடதமும் குசேலோ பாக்கியானமும், அரிச்சந்திர புராணமும் பாரதக் கதைகளின் விரிவுகளன்றோ.

நல்லாப்பிள்ளை

நல்லாப்பிள்ளையார் 13950 பாடல்களில் பாரதம் பாடியுள்ளார். வில்லிப்புத்தூர் ஆழ்வாரின் பாரதப் பாடல்களை ஆயிரக்கணக்கில் முழுமையாகத் தழுவி இயற்றப்பட்டதால் இது பிரபலமடைய வில்லை.

கி.பி.2000 இல் இஸ்லாமியரான கா.காசிம் ஐ.பி.எஸ். மகாபாரத்தில் அரசியல் சிந்தனை எனும் நூலைத் தந்துள்ளார்.

சையிது முகம்மது அண்ணாவியார்

சையிது முகம்மது அண்ணாவியார் மதுரையில் பிறந்தவர்.

தந்தை	:	செய்குமீரான் லெப்பை
பாட்டனார்	:	நூருத்தீன் லெப்பை
குரு	:	வகாபுத்தீன் சாகிபு

இளமையிலேயே சையிது முகமது அண்ணாவியார் பெற்றோரை இழந்தார். மதுரையைவிட்டு மதுக்கூரை அடைந்தார்.

மூத்தாக் குறிச்சியில் வாணியச்செட்டியார் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியரிடம் பயின்று புலமைபெற்றார். ஆசிரியர் மறைந்தார் சையிது முகம்மது அண்ணாவியார் நாகூருக்குச் சென்றார். வகாபுத்தீன் சாகிபின் நண்பர் ஆனார் அவரை ஆன்ம குருவாக ஏற்றார். அங்கிருந்து அய்யம்பேட்டை சென்றார் பள்ளிக்கூடம் வைத்து மாணவர்களுக்குக் கல்வி போதித்தார். அதனால் அண்ணாவியார் என்ற பட்டம் பெற்றார்.

செல்லி நகர்

அதிவீரராமபாண்டியரின் தாயார் பெயரில் செல்லி நகர் என்ற ஊர் அமைந்தது. செல்லி அம்மன் கோவில் இருப்பதால் செல்வி நகர் என்ற பெயரும் இருந்தது.

சீமான் லெப்பைத் தம்பி மரைக்காயர்

அதிவீரராம பாண்டியன் இறந்த பின் மக்கள் அந்நகருக்கு அதிவீரராமன் பட்டினம் என்று பெயரிட்டனர். அதுவே மருவி அதிராமபட்டினமாயிற்று என்பர். அங்கு கதிர்வேலு உபாத்தியார் மக்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தார். அவரைச் சமாளித்திட சிறந்தவர் சையிது முகமது அண்ணாவியார் என்று முடிவெடுத்து சீமான் லெப்பைத்தம்பி மரைக்காயர் கடிதம் கொடுத்து அனுப்பி சையிது முகமது அண்ணாவியாரை அதிராம்பட்டினத்திற்கு அழைத்து வந்தார்கள். பின்னர் கதிர்வேலுவும் சையிது முகமதுவும் நட்புபூண்டனர்.

ஹிஸ்ரி மதாறுசாகிபு

1167 இல் (கி.பி 1747) மதாறுசாகிபிடம் உரைவாங்கி 'அலிநாமா' எனும் நூலை சையிது முகமது அண்ணாவியார் இயற்றினார் லெப்பைத்தம்பி மரைக்காயர் முன் அரங்கேற்றினார்.

அமிர்தமதுரகவி

தன்னை அமிர்த மதுரகவி என்று அழைத்திடும் சையிது முகமது அண்ணாவியார் பத்துப்புராணங்களை எழுதியுள்ளார். 'நூறு நாமா' என்ற நூலையும் தந்துள்ளார்.

சையிதுமீரா லெப்பை

சையிது முகமது அண்ணாவியாருக்கு சையிது மீரா லெப்பை, நூர் முகம்மது என்ற இரண்டுபிள்ளைகள்

ஜீவரத்ன கவி என்று போற்றப்பட்ட சையது மீராலெப்பை மனை கலங்காரம் என்ற நூலையும், மதீனக் கலம்பகம், நூலையும் தந்துள்ளார். இவர் பாடிய வாள் விருத்தம், பரிவிருத்தம் யானை விருத்தம் நூல்கள் கிடைக்கவில்லை.

நூர் முகம்மது அண்ணாவி

சையிது முகம்மது அண்ணாவியின் இளையமகனாக நவரத்ன கவி நூர் முகம்மது அண்ணாவி 'பிக்ஹு மாலை' என்ற நூலை எழுதியுள்ளார்.

நயினா முகம்மதுபாவாப் புலவர்

சொர்ணகவி என்று அழைக்கப்பட்ட சையிது முகமது அண்ணாவியாரின் பேரன் நயினா முகம்மதுப் பாவாப் புலவர் 'மழைப்பாட்டு' இயற்றினார் நாட்டில் மூன்றாண்டுகள் நீடித்திருந்த பஞ்சம் தொலைந்தது.

முத்துப்பேட்டை செய்கு தாவூது (வலி)

முத்துப்பேட்டையில் அடங்கப் பெற்றிருக்கும் செய்கு தாவூது வலியுல்லாஹ் மீது பிள்ளைத் தமிழ், கியாமத்மாலை, திருமண வாழ்த்து, வழி நடைச்சிந்து, கொம்புரவ்வு இல்லாத வண்ணம் ஆகிய நூல்களை நயினா முகம்மது பாவாப்புலவர் இயற்றினார்.

சையிது முகம்மது அண்ணாவியாரின் குடும்பமே வாழையடி வாழையாக அன்னைத் தமிழுக்கு இஸ்லாமிய இலக்கியங்கள் தந்து அணி சேர்த்து, தனது 65வது வயதில் சையது முகம்மது அண்ணாவியார் மறைந்தார். அவரது உடல் அதிராம் பட்டினத்தில் அடக்கச் செய்யப்பட்டுள்ளது. அவரது குலத் தோன்றல்கள் இன்றும் அதிராமபட்டினத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

மகாபாரத அம்மானை

சையிது முகம்மது அண்ணாவியார் ‘மகாபாரத அம்மானை’ நூலைத் தந்துள்ளார்.

பற்சமயம் ஒன்றாய் பயில்வன் நபிமா மரபோன்
தற்சமயம் தன்னில் தச புராணம் பகர்ந்தோன்
சந்தமிகும் செல்லி நகர் செய்து முகம்மதென்போர்
இந்தப் புராணம் இயம்பினன் காண் அம்மானை

என்று மகாபாரத அம்மானைப் பாடலில் சையிது முகம்மது அண்ணாவியார் பாடுகிறார்.

சந்தாதியசுவமகம்

மகாபாரத்தில் ஆதிபருவம் முதல் சொர்க்காரோ கணபருவம் வரை 18 பருவங்கள் அதில் 14 வது பருவம் அஸ்வமேதிக பருவம் (குதிரையாகப் பருவம்) இந்தப் பருவத்தை

பாரதம் சந்தாதியசுவமகம் எனும் தலைப்பில் நான்கு ஆயிரம் பாடல்களாக எழுதியவர் சையிது முகமது அண்ணாவியார் இரண்டாயிரம் பாடல்கள் ஏட்டிலும் இரண்டாயிரம் பாடல்கள் தாளிலும் எழுதப்பட்டது.

பண்டிதர் சமதரிசந

சையிது முகமது அண்ணாவியார் பண்டிதர் சமதரிசந என்ற சொற்றொடருக்கிணங்க சமரச நோக்குடையவர். **இவர் பாரதம் இயற்றியது ஒரு தனிச்சிறப்பாகும்.**

உ.வே.சாமிநாதையர்

தமிழே தம் உயிர் என்று எண்ணி வாழ்ந்த உ.வே. சாமிநாதையர் உழைப்பால் சங்க இலக்கியங்கள் பல அச்சேறின சுவடி தேடச் சென்ற போது பசியின்

கொடுமையால் புளியமரத்து இலைகளைத் தின்று பசியைப் போக்கிக் கொண்டவர் உ.வே.சா.

அவரது தேடலின்போது அதிராம்பட்டினத்தின் சையிது முகமது அண்ணாவியாரின் பாரதம் சாந்தாதி அசுவமகம் என்னும் நூலின் முற்பகுதி மட்டுமே கிடைத்தது. அது உ,வே.சா நூல் நிலையத்தின் ஏட்டுப்பிரதியில் பிரதி எண் 594 ஆக உள்ளது. இந்தப்பகுதியும் சிதிலமடைந்து வருவதால் 1989இல் அதனை தனிநூலாக அச்சிட்டனர்.

பேராசிரியர் ஜெகந்நாதாசார்யர்

மகாபாரதம் பதினான்காவது அசுவமேத பருவம் சாந்தாதியசுவமகம் நூலுக்கு பதிப்பாசிரியர் உரையாசிரியர் பேராசிரியர் ஜெகஞ்நாதாசார்யர், நாட்டுச் சருக்கம், நகரச்சருக்கம், தருமராஜன் கீர்த்திச் சருக்கம், எமனாசூரன் போர்ச்சருக்கம், அனுசாளுவச் சருக்கம், வேள்வியாரம்பச் சருக்கம், நீலத்து சன் போர்ச்சருக்கம் சண்டிகை சாபநிவாரணச்சருக்கம் சுதர்மத்துசன் போர்ச்சருக்கம் (இதில் 197 வது பாடலுக்குப்பின் இல்லை) மொத்தம் தற்சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் உட்பட 1186 ஓர் ஆயிரத்து நூற்றொண்பத்தாறு மட்டுமே அச்சில் வந்துள்ளது.(சில பாடல்கள் சிதிலமடைந்துள்ளது)

சுப்பிரமணியர் பிரசன்ன பதிகம்

பதிநான்கு செய்யுட்கள் கொண்ட சுப்பிரமணியர் பிரசன்ன பதிகம் பாடியவர் சையிது முகமது அண்ணாவி சத்தியத்தையும் தருமத்தையும் கடைப்பிடித்திட வேண்டும் என்ற உறுதிப்பாடுடன் ஆத்மதிருப்பதியுடன் பிறரைத் தான் ஏமாற்றாமலும், தன்னைப் பிறர்

ஏமாற்றாமலும், விழிப்புடன் இருக்க, பொறாமை ஏற்படாது தடுத்திட, தியாகம் புரியத் தூண்டிட சஞ்சலபுத்தி அகன்றிட சிந்தனையைத் தூண்டும் மகாபாரதத்தில் 1370 பாடல்கள் மட்டுமே கிடைத்தது. அதில் 1186 பாடல்களே முழுமையாக அச்சேறியது.

சாதிசமய துவேஷமின்றி சமயப் பொறையுடன் இந்துக்களும் - முஸ்லீம்களும் இணைந்து வாழ்ந்த இன்பத்தமிழகம் சையிது முகமது அண்ணாவியரின் மகாபாரதம் அதற்கோர் இலச்சினை மனதில் எழுகிறது மகிழ்ச்சி முழுமையாக காரணம் முழுமையாக அது கிடைக்கப் பெறவில்லை.

கிடைத்ததில் சில காட்சி அமிர்தத்துவசன் - சாம்பநகர் அரசன் (அமுதத்துசன்) அவனது மூத்த மகன் சுதர்மத்துசன். அருச்சுனனும் (வில்லுக்கு விஜயன்) சுதர்மனும் கடும்போர் புரிய அதனைக் கண்ட வானோர் பிரளய காலம் வந்ததென நடுங்குதல், சுதர்மன் எதிரிட்டு வருதல் சுதர்மன் ஆக்கிய சரக்கூடத்தை அருச்சுனன் அழித்தல். அருச்சுனன் ஆக்கிய சரவரணைச் சுதர்மன் சிதைத்தல் போர்காண வந்த வானோர் போரின் கடுமை கண்டு நடுங்குதல், இருவரும் சரிசமானமாகப் போரிடல் பற்றிய கவிதைகளை செய்யது முகமது அண்ணாவியார் இயற்றியுள்ளார். அதில் ஒரு கவி இதோ (அமுதத்துசன் அவனது மகன் சுதர்மத்துசன் போர்ச் சுருக்கம்).

அண்ட ரண்ட பகிரண்ட மெண்டிசையை
டங்கவே நடுநடுங்கவே
சண்டனிருந்தும் வெருவுண்டு பாதை தடு
மாற வே மலைகள் நீறவே
மண்டலங்கிழிய மாசுணந்தலைம
யங்க மோலிக ளொறுங்கவே

தொண்டு வெங்கடல் குழம்பு கும்பியொடு
சுவறவெண்கரிகள் கதறவே

(பாடல் 172)

ஒற்றகை விரகம் ஒற்ற வெம்பகழி
ஒற்ற வில் வலிமை யொற்ற தோர்
ஒற்ற வெம்புரவி ஒற்ற பாகர் உர
முற்றுகைத் தசர மத்தியம்
ஒற்றபம்பரம தொக்கவெஞ்கழலை
யொற்றிரண்டரிகள் சுற்றவே
ஒற்ற வெஞ்சமருயிர்ந்த சம்பிரம
மொத்திருந்த திருவோருமே

(பாடல் 173)

4 வரியில் 8 இடங்களில் 'ஒற்ற' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் அண்ணாவியார். அண்ட பகிரண்டம், வானம், வானுலகம், பூமி பாதாலம், கடல் அனைத்தும் நடுங்கின எனக் காட்டி இருவரும் இட்டபோர் செறிவை விளக்கினார் சையிது முகமது அண்ணாவியார். இரண்டு சிங்கங்கள் அருச்சுனனும் சுதர்மனும் பம்பரத்தைப்போலச் சுழன்று சுழல்தடியைக் கொண்டு தாக்கிய கடும் போர் வெளிப்படுத்திய பரபரப்பு சமானமாயிருந்தன என்று சையிது முகமது அண்ணாவியார் வர்ணிக்கிறார்.

சையிது முகமது அண்ணாவியாரின் மகாபாரதம் 4000 பாடல்கள், கிடைத்தது 1376 அதன் முழுமையாக உள்ளது 1186 மட்டுமே.

கால வெள்ளத்தில் கரைந்து போன கவிகள் பட்டியலில் சையது முகமது அண்ணாவியாரின் மகாபாரதக் கவிகளும் சேருகின்ற தல்லவா! மனதில் ஒரு

சோகம் துளிர்க்கிறதல்லவா! மகாபாரதம் பாடிய முஸ்லிம், இந்து - முஸ்லிம் ஒற்றுமை - மகிழ்வு பிறக்கிறதன்றோ!

தருமன் மகாபாரதப் போரில் ஏற்பட்ட தோஷம் நீங்க வியாசர் கூறியபடி அசுவமேதயாகஞ் செய்தார். மகாபாரதத்தில் பதினான்காவது அசுவமேத பருவம்; அதற்கு 'சாந்தாதியசுவமகம் என்று சையிது முகம்மது அண்ணாவியார் பெயரிட்டார்.

அசுவமேதிக பருவம்

அசுவமேத பருவம்

அநுகீதா பருவம்

வைஷ்ணவதர்ம பருவம்

என முப்பிரிவுகள் அசுவமேதிக பருவத்தில் உண்டு.

அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து, 'போரின்போது எனக்குப் பற்பல உபதேசங்களைக் செய்தீர். அப்போது நான் மிகவும் கவலையுடன் இருந்தேன். அக்கவலையால் நீர் சொன்னவை மறந்து விட்டது. எனவே அவற்றைக் கேட்க மிகவும் ஆவல் உள்ளவனாய் இருக்கின்றேன்' என்று கூறினான்.

அநுகீதா பருவம்

உடனே கண்ணன், 'அர்ச்சுனா உனக்கு தர்மத்தின் சொருபத்தையும் சாஸ்வதமான எல்லா உலகங்களையும் பற்றிக் கூறினேன். ஆனால் என்னால் இனி முழுவதையும் சொல்ல முடியாது இருப்பினும் சுருங்கக் கூறுகிறேன்' என்றான்.

மறுபடியும் கீதா உபதேசித்த பருவம்

அர்ச்சுனனுக்கு கண்ணன் கீதையை மறுபடியும் உபதேசித்த சுருக்கம் வைஷ்ணவ தருமச் சருக்கமும் அசுவமேதிக பருவத்தில் அடங்கியுள்ளது. (வியாச

பாரதம், தொகுதி 3, வ.ஜோதி, பக்கம் 1858). தர்மத்தை உபதேசிக்கும் பருவத்தை சையிது முகம்மது அண்ணாவியார் பாடியுள்ளார்.

கிருஷ்ணர் காண்டீபனுக்கு பிரம்ம ஞானோப தேசம் செய்தல் அசுவமேதபர்வத்தில் உள்ளது என்பர் அ.சுப்பிரமணியபாரதி, (ஸ்ரீவியாஸபாரத், வஸன சங்க்ரஹம், 1932 பக்கம் 685).

கும்பகோணம் பதிப்பு

வியாசர் மகாபாரதத்தை 18 பருவங்களில் செய்து முடித்தார். அதில் ஆஸ்வமேதிக பருவம் 3320 சுலோகங்கள் என்று கும்பகோணம் பதிப்பு கூறுகிறது.

டாக்டர். வி.எஸ்.சுதங்கர் பதிப்பு

அஸ்வமேதிக பருவம் 3320 ஸ்லோகங்கள் என்று டாக்டர் வி.எஸ்.சுதங்கர் பதிப்பு கூறுகிறது. இந்தப் பருவத்திற்கு சையிது முகமது அண்ணாவியார் ஏட்டிலும், தாளிலுமாக 4800 பாடல்களை எழுதியுள்ளார்.

18 அக்குரோணிகள்

ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரை, ஐந்து காலாள் அடங்கியது ஒரு பத்தி.

3 பதிகள்	-	ஒரு வேனுமுகம்
3 வேனுமுகம்	-	ஒரு குல்மம்
3 குல்மம்	-	ஒரு கணம்
3 கணம்	-	ஒரு வாகினி
3 வாகினி	-	ஒரு பிருதனை
3 பிருதனை	-	ஒரு சமு
3 சமு	-	ஒரு அனிகீனி
10 அனிகீனி	-	ஒரு அக்குரோணி

ஒரு அக்குரோணி

ஒரு அக்குரோணியில்,
தேர்கள் 21870
யானைகள் 21870
குதிரைகள் 65610
காலாட்கள் 109350 இருப்பார்கள்

18 நாட்கள்

மகாபாரதப் போர் 18 நாட்கள் நடைபெற்றது. கௌரவர்கள் சார்பாகப் பதினொரு அக்குரோணியும், பாண்டவர்கள் சார்பாக ஏழுஅக்குரோணிகள் போரில் பங்கெடுத்தது.

கௌரவர்கள் பக்கம் 4 அக்குரோணி படை அதிகம் இருந்தது என்னும் **படைபலம் குறைந்த பாண்டவர்களே பாரதப் போரில் வெற்றி பெற்றனர்.**

நிலையான தருமம்

'அகிம்சா பரமோ தர்மா' என்பது முதல் அறம். நிலையான தருமம், அது போலவே வாய்மை போன்ற இன்னபிற தருமங்களும், முதல் அறங்களும் சார்பு அறங்களும் எல்லாச் சமுதாயங்களிலும் உண்டு. (பழ.கருப்பையா மகாபாரதம் மாபெரும் விவாதம் பக்கம் 306).

தருமபுத்திரர் அசுவமேதம் யாகம் செய்ததும், பின்பு கிருஷ்ணன் கீதையில் சொல்லிய விஷயங்களை அர்சுனன் மறந்து போய் விட்டபடியால் அவனுக்கு அவர் கீதையின் சாரத்தை அநுகீதாரூபமாகச் சொன்னதுமே இப்பர்வத்தின் கதையாம் (ஸ்ரீமஹாபாரத வினாவிடை ஆ.ஸீ.க. பக்கம் XV)

அசுவமேத பருவத்தை அகிலம் அறிய திரும்பவும் பாடிய சையிது முகம்மது அண்ணாவியின் பெயர் மகாபாரத இலக்கிய வரலாற்றில் என்றென்றும் மறையாததல்லவா!